**செய்தி வெளியீடு எண் : 1273** **நாள் : 22.08.2024**

**தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த ஆயுதப்படை பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு.**

தஞ்சாவூர் மாவட்ட ஆயுதப்படை பெண் காவலராக பணியாற்றிவந்த அரியலூர் மாவட்டம், பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சுபபிரியா (காவலர் எண்.1680) (வயது 23) த/பெ.சக்திவேல் என்பவர் நேற்று (21.8.2024) மாலை சுமார் 08.30 மணியளவில் பட்டுக்கோட்டை உட்கோட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம், கண்ணமுடையார் அய்யனார் கோவில் திருவிழாவின் பாதுகாப்பு பணி முடிந்து தனது தங்குமிடத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரது பின்புறம் பேராவூரணியிலிருந்து இரட்டைவயல் நோக்கி வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பேராவூரணி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

செல்வி. சுபபிரியா அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

செல்வி. சுபபிரியா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu